**செ வெ எண்-440 01.08.2009**

**பத்திரிக்கை செய்தி**

அரசு அனுமதியின்றி சென்னை மாநகரில் ஆட்டோரிக்ஷாக்கள் ஓட்டப்படுகின்றன என்று பல புகார்கள் வந்துள்ளதால், 01.08.2009 அன்று காலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை தொடர்ச்சியாக சென்னை மாநகரில் போக்குவரத்துத்துறை மற்றும் காவல் துறை அலுவலர்களுடன் இணைந்து ஆட்டோரிக்ஷா வாகனங்கள் மீது திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ட, திருவாண்மியூர் மற்றும் கிண்டி ஆகிய நான்கு இடங்களிலும், முற்பகல் 11.00 மணி முதல் மாலை 4.00 வரை பெரம்பூர், வடபழனி, அடையார் மற்றும் சைதாப்பேட்டை ஆகிய நான்கு பகுதிகளிலும், மாலை 4.00 முதல் இரவு 9.00 மணி வரை மூலக்கடை, தியாகராஜன் நகர், இராயப்பேட்டை மற்றும் சேத்துப்பட்டிலும் ஆக மொத்தம் 12 இடங்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இச்சோதனையின் முக்கிய நோக்கம் சென்னை மாநகரில் அனுமதி சீட்டு இல்லாமல் இயக்கப்படும் ஆட்டோ ரிக்ஷாக்களை கண்டறிந்து கைப்பற்றி அவற்றின் இயக்கத்தை தடுப்பதாகும்.

இச்சோதனையில் மாலை 5.00 மணி வரை 174 ஆட்டோரிக்ஷாக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த சோதனை இரவு 9.00 மணி வரை தொடரும். கைப்பற்றப்படும் அனைத்து ஆட்டோரிக்ஷாக்களும் கீழ்கண்ட இடங்களில் காவல் துறையின் மேற்பார்வையில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும்.

1. **ராஜரத்தினம் விளையாட்டு மைதானம், எழும்பூர்**
2. **மாநகர போக்குவரத்து பணிமனை குரோம்பேட்**
3. **கோயம்பேடு, சென்னை பெறுநகர வளர்ச்சி குழுமத்திற்குச் (CMDA) சொந்தமான இடம்.**

கைப்பற்றப்பட்ட வாகனங்களின் விவரங்களை போக்குவரத்து துறை இணையதளத்தில் வெளியிட ஆவன செய்யப்பட்டுள்ளது. இணையதள முகவரி www.tn.gov.in/sta ஆகும். கைப்பற்றப்பட்ட வாகனங்களின் உரிமையாளர்கள் வாகனத்தின் அசல் ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட வட்டார போக்குவரத்து அலுவலகங்களை அணுகி வாகனத்தினை மீட்டுக் கொள்ளலாம். இம்மாதிரியான வாகன தணிக்கை இனி வருகாலங்களிலும் தொடரப்படும் என இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

முதன்மை செயலர்/
போக்குவரத்து ஆணையர்

ISSUED BY DIPR CHENNAI -09